**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.210/21**
**வழக்கு சாட்சி – அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருண்குமார் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 02.05.23

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சுக்குவாடன்பட்டி பொம்மையகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்துவருகிறேன். எதிரியை தெரியும். அசா1 ஐ தெரியாது . 17.9.21 ம் தேதி நானும் அருண்ராஜா என்வரும் வேலை முடித்துவிட்டு இருசக்கரவாகனத்தில் அன்னஞ்சிவிலக்கிலிருந்து தேனிக்கு சென்றுக்கொண்டிருந்தோம். மாலை 6.30 மணி முதல் 7 மணி இருக்கும். பைபாஸில் ரோட்டில் கிளப் அருகே ரோட்டை கடப்பதற்காக முருகேசன் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி இருசக்கரவாகனத்தில் பைபாஸ் ரோட்டில் வந்து முருகேசன் மீது இடித்துவிட்டார். அதில் முருகேசன் கிழே விழுந்துவிட்டார். நாங்கள் சென்று அவரை துாக்கி பார்த்த போது அவர் மயங்கிவிட்டார். அவருக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அருண்ராஜா அவரது பாக்கெட்டிலிருந்து ஆதார்கார்டு செல்போனை எடுத்து பார்த்து போன் பண்ணி அவரது வீட்டிற்கு தகவல் சொன்னார். ஆம்புலன்ஸில் அவரை தேனி கவிலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு நாங்கள் பின்னாலே மருத்துவமனைக்கு இருசக்கரவாகனத்தில் சென்று சிகிச்சைக்கு சேர்த்த போது அங்கு அவரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். அப்போது அவரது மகளும் உறவினர்களும் மருத்துவமனை வந்து எங்களிடம் விசாரித்தார்கள். அவர்களிடம் விபரத்தை கூறிவிட்டு வந்துவிட்டோம். மறுநாள் விபத்து சம்மந்தமாக அல்லிநகரம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.